© பதிப்புரிமையுடையது தொடர் இல:……………….

# Institute of Certified Management Accountants of Sri Lanka

## தொழிற்பாட்டு மட்டம்
## நவம்பர் 2015 பரீட்சை

| | | | |
|---|---|---|---|
| **பரீட்சைத் திகதி:** | 21 நவம்பர் 2015 | **பக்கங்களின் எண்ணிக்கை :** | 05 |
| **பரீட்சை நேரம்:** | 1.30 பி.ப – 4.30 பி.ப | **வினாக்களின் எண்ணிக்கை:** | 07 |

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

1. அனுமதிக்கப்பட்ட காலம் **மூன்று (3) மணித்தியாலம்**.
2. மொத்தம்: **100 புள்ளிகள்**
3. பகுதி I இல் **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
   பகுதி II இல் பிரிவுகள் **A** மற்றும் **B** ஒவ்வொன்றிலிருந்தும் தலா இரண்டு (2) வினாக்கள் வீதம் தெரிவு செய்து மொத்தம் **நான்கு (4)** வினாக்களுக்கு விடை தருக.
4. பிரிவு **A**: தொழிற்பாடுகள் முகாமைத்துவம்; பிரிவு **B**: தகவல் முறைமைகள் முகாமைத்துவம்.

| பாடம் | பாடக் குறியீடு |
|---|---|
| **தொழிற்பாடுகள் மற்றும் தகவல் முறைமைகள் முகாமைத்துவம்**<br>**Operations and Information Systems Management** | **(OIM / OL 3 - 203)** |

## பகுதி I

**வினா இல. 01 (20 புள்ளிகள்)**

வினா இல 1 இன் எல்லாப் பகுதிகளுக்கும் விடை தருக. ஒவ்வொரு பகுதிக்கும் **மிகவும் பொருத்தமான** விடையை தெரிவுசெய்து உமது விடைப்புத்தகங்களில் ஒழுங்காக வினா இலக்கத்தையும் அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் ஆங்கில எழுத்தையும் (a, b, c அல்லது d) எழுதுக

(1) பௌதிக உருவத்தில் மாற்றத்திற்கு ஆளாகக்கூடிய வளங்கள் அழைக்கப்படுவது:
- (a) மாற்றப்பட்ட (Transformed) உள்ளீடும் மாறும் உள்ளீடும்
- (b) மூலப்பொருட்களும் மாற்றப்பட்ட உள்ளீடும்.
- (c) மாறும் உள்ளீடும் புத்துருவாகும் வேலையும்
- (d) மாற்றற் செயன்முறையும் மாறும் உள்ளீடும்.

(2) கீழ்வருவனவற்றில் தந்திரோபாய தீர்மானம் மேற்கொள்ளல் (strategic decision making) செயன்முறையின் ஒரு ஒழுங்குமுறையான படிமுறையாக கருதப்பட **முடியாதது** எது?
- (a) மாதிரிமுறையின் ஆக்கம் (Formulation of a model)
- (b) பிரச்சினையை பொருள்வரையறை செய்தல் (Defining the problem)
- (c) பகுப்பாய்வு மீளாய்வினை மேற்கொள்ளல் (Carrying out analytical review)
- (d) மாற்றுவழிகளை கண்டுபிடித்தல் (Generating alternatives)

(3) சுற்றுலாப் பருவகாலங்களின்போது மொத்த கேள்வியை நிறைவுசெய்வதற்கு போதிய ஹோட்டல் அறைகள் இல்லாதபோது, உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் அறைகளை ஒதுக்கீடு செய்வதனை தவிர்க்கும்பொருட்டு அறைக்கட்டணங்கள் அதிகரிக்கும். இந்தநிலை எதன்கீழ் விபரிக்கப்படும்?
- (a) கேள்வி முகாமைத் தந்திரோபாயம் (Demand Management Strategy)
- (b) துரத்தல் முகாமைத் தந்திரோபாயம் (Chase Management Strategy)
- (c) இயல்வலு மட்டத் திட்டம் (Level Capacity Plan)
- (d) மேற்கூறிய எவையுமன்று

(4) உற்பத்தியினை பெறுகின்றவர்கள் வெளியாரோ அல்லது உள்ளே உள்ளவர்களோ என்பதனை கருதாது, நிறுவனத்திலுள்ள ஒவ்வொருவரும் பெறுகின்றவர்கள் திருப்தியடையும் வகையில் தமது வகிபாத்திரத்தை மேற்கொள்ள முயற்சிக்கவேண்டும். இந்தக் கோட்பாடு எதனுடன் பொருந்தும்?

(a) மொத்த தர முகாமைத்துவம் (Total Quality Management)
(b) உடனடி வழங்கல் (Just in Time)
(c) ஐந்து மாதிரிமுறைகள் (The five’s model)
(d) தேவைப்படும் பொருட்களை திட்டமிடுதல் (Material Requirement Planning)

(5) பொருட்கள் கட்டளையிடப்பட்ட காலத்திற்கும் அவற்றை பெறும் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் உற்பத்திக்கான கேள்வியை நிறைவுசெய்ய தேவைப்படும் தொக்கின் அளவு எது?

(a) சுற்றுத் தொக்கு (Cycle inventory)
(b) பாதுகாப்புத் தொக்கு (Safety inventory)
(c) பருவகாலத் தொக்கு (Seasonal inventory)
(d) போதுமான தொக்கு (Adequate inventory)

(6) கீழ்வருவனவற்றில் முறைமை வளமாக (system resource) உள்ளடங்காதது எது?

(a) தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் (Operating instructions)
(b) பிரயோக மென்னுறுப்பு (application software)
(c) தகவல் வளங்கள் (Information resources)
(d) முறைமை மென்னுறுப்பு (system software)

(7) மீள்முறையாக்கம் (Re- engineering) என்பது எவற்றின் முக்கிய தற்கால நடவடிக்கைகளில் மிகுந்த மேம்பாட்டினை அடைவதற்கு வியாபார செயன்முறைகளின் அடிப்படை மீள்யோசனையும் பாரிய மீள்வடிவமைப்பும் ஆகும்.

(a) கிரயம், தரம், சேவை மற்றும் வேகம்
(b) தரம், வளர்ச்சி, சேவை மற்றும் வேகம்
(c) கிரயம், சேவை, வேகம், வினைத்திறன் (efficiency)
(d) வேகம், கிரயம், விளைவுத்திறன் (effectiveness) மற்றும் சேவை

(8) கம்பனியொன்று வரையறுக்கப்பட்ட வெளிவாரி வாடிக்கையாளர் குழுவொன்றிற்கு அதன் கணனி முறைமையின் சில கோப்புக்களை பயன்படுத்தும் வசதியினை (access facility) செய்துகொடுக்க விரும்புகின்றது. இதனை அடைவதற்கு எதனை நடைமுறைப்படுத்தவேண்டும்?

(a) வெளிவாரி வலையமைப்பு (Extranet)
(b) உள்வாரி வலையமைப்பு (Intranet)
(c) இணையத்தளம் (Internet)
(d) நிறுவன வளத் திட்டமிடல் (ERP)

(9) செயற்திட்ட ஒருங்கிணைப்பு முகாமைத்துவத்தின் (project integration management) மூன்று பிரதான செயன்முறைகளும் எவை?

(a) செயற்திட்ட திட்ட விருத்தி, திட்ட நிறைவேற்றம், ஒருங்கிணைந்த மாற்றக் கட்டுப்பாடு.
(b) செயற்திட்ட திட்ட விருத்தி, நோக்கெல்லைத் திட்டமிடல், நோக்கெல்லை மாற்ற கட்டுப்பாடு.
(c) செயற்திட்ட ஆரம்ப ஏற்பாடு, நோக்கெல்லை திட்டமிடல், நோக்கெல்லை மாற்ற கட்டுப்பாடு
(d) செயற்பாடுகள் பொருள்வரையறை, செயற்பாட்டு தொடரொழுங்கு, மாற்ற முகாமைத்துவம்.

(10) பெறுமதிச் சங்கிலியில் (value chain) **உதவிச் செயற்பாடுகளின்** கீழ் அமையாதது எது?

(a) முனித வள அபிவிருத்தி (Human Resource Development)
(b) தொழில்நுட்ப அபிவிருத்தி (Technology Development)
(c) நிறுவன உட்கட்டமைப்பு (Firm Infrastructure)
(d) தொழிற்பாடுகள் (Operations)

**(10 × 2 புள்ளிகள் = மொத்தம் 20 புள்ளிகள்)**

பகுதி I இன் முடிவு

## பகுதி II

**பிரிவு A: தொழிற்பாடுகள் முகாமைத்துவம்**

**<u>ஏதாவது இரண்டு (2)</u> வினாக்களுக்கு விடை தருக**

**<u>வினா இல. 02 (20 புள்ளிகள்)</u>**

"எமது குறிக்கோள் வங்கித் துறையில் எம்மை வேறுபடுத்தி, சிறய மற்றும் நடுத்தர தாளாண்மைகளின் (SME) வளர்ச்சிக்கு உதவுவதாகும்" என ஒரு முன்னணி வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலர் அண்மையில் கூறியிருந்தார். வேறுபடுத்திக் காட்டுதல் (Differentiate) என்பது, வாடிக்கையாளரை வென்று அவர்களை கணிசமான காலத்திற்கு தக்கவைப்பதற்காக பல வர்த்தக தாளாண்மைகள் கடைப் பிடிக்கும் ஒரு தந்திரோபாயமாகும்.

**நீர் செய்யவேண்டியது:**

(a) ஒரு வங்கி நிதிசார்ந்த மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அதனை வேறுபடுத்திக் காட்டக்கூடிய இயலுமைகள் (capabilities) **<u>ஐந்தினை (5)</u>,** சுருக்கமா விபரிக்குக. **(10 புள்ளிகள்)**

(b) வங்கியொன்று அதன் தந்திரோபாய தகுதிகளை (strategic competencies) மேம்படுத்துவதற்கு கிரயத் தலைமைத்துவத்தை (cost leadership) எவ்வாறு தெரிவுசெய்யமுடியுமென உமது சொற்களில் விளக்குக. (ஒரு வங்கிக்கு கிடைக்கக்கூடிய வேறுபட்ட முறைகள் / நுட்பங்களை விபரிக்குக). **(06 புள்ளிகள்)**

(c) நீர் மேற்படி வங்கியின் தொழிற்பாடுகள் முகாமையாளரெனக் கொள்க. வங்கி தொழிற்பாட்டு நோக்கங்களை அடைவதனை உறுதிசெய்வதற்கு **<u>இரண்டு (2)</u>** நேரடிப் பொறுப்புக்களை குறிப்பிடுக. **(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**<u>வினா இல. 03 (20 புள்ளிகள்)</u>**

ABC கம்பனியின் உற்பத்தி முகாமையாளர், பொருத்தற் பிரிவின் (assembly department) தாமதம் காரணமாக கம்பனி பல வாடிக்கையாளர்களின் உற்பத்தி இலக்குகளை அடையமுடியாது இருப்பதனை அவதானித்துள்ளார். தாமதத்திற்கான காரணங்களை அறிவதற்கு ஒரு வேலை ஆய்வு (work study) மேற்கொள்ளப்பட்டது. பயிற்சிபெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் போதாமை, அத்தியாவசிய உதிரிப் பாகங்களின் பற்றாக்குறை, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களில் குறைபாடுகள் ஆகியன கம்பனி முகங்கொடுக்கும் முக்கிய பிரச்சினைகளாகும். இவற்றிற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட ஆலோசகர், தற்போதைய பிரச்சினைகளிலிருந்து விடுபட கம்பனி மெலிதான உற்பத்தி முறைமையை (lean manufacturing system) கடைப்பிடிக்கவேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளார்.

**நீர் செய்யவேண்டியது:**

(a) "மெலிதான உற்பத்தி" என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது என்ன? **(05 புள்ளிகள்)**

(b) மேற்படி வியாபாரத்தின் தொழிற்பாடுகள் சீராக நடைபெறுவதற்காக விரயங்களை தடுக்கும் வகைமுறைகள் **<u>ஐந்தினை (5)</u>** குறிப்பிடுக. **(10 புள்ளிகள்)**

(c) அக மற்றும் புற தவறுகைக் கிரயங்கள் (failure cost) எவ்வாறு தர மேம்படுத்தற் செயன்முறையை வளப்படுத்துகின்றன என விபரிக்குக. **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**<u>வினா இல. 04 (20 புள்ளிகள்)</u>**

மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் அறவீடுகளில் வீழ்ச்சி, எரிபொருட்களின் சில்லறை விலைகளில் வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக 2015 ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வரையறுக்கப்பட்ட T L (தனி) கம்பனியினால் இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கான உண்மையான கேள்வி கீழே காட்டப்பட்டவாறு, எதிர்வுகூறப்பட்ட கேள்வியைவிட கணிசமாக அதிகரித்துள்ளது.

| மாதம் | உண்மைக் கேள்வி | எதிர்வுகூறல் கேள்வி |
|---|---|---|
| ஜனவரி | 50 | 40 |
| பெப்ரவரி | 40 | 50 |
| மார்ச் | 60 | 45 |
| ஏப்ரல் | 70 | 80 |
| மே | 40 | 50 |
| ஜுன் | 45 | 50 |

**நீர் செய்யவேண்டியது:**

(a) உண்மை இடை வழு (Mean Absolute Error) மற்றும் சதுர இடை வழு (Mean Error) ஆகியவற்றினை கணிக்குக. **(05 புள்ளிகள்)**

(b) கீழே தரப்பட்டுள்ளனவற்றில் ஏதாவது **<u>மூன்று (3)</u>** பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
   (i) ஒரேநேரத்து முறையாக்கம் (Concurrent Engineering)
   (ii) வியாபார நிறுவனங்களில் பிரயோக ஆராய்ச்சியின் (applied research) முக்கியத்துவம்
   (iii) உடன்கொள்வனவு (JIT) முகாமைத்துவ நடைமுறையின் பிரயோசனம்
   (iv) வழங்குனர்/ உற்பத்தியாளரிடமிருந்து வாடிக்கையாளருக்கு நேரடியாக வழங்குதல் (Cross docking) **(3 × 5 புள்ளிகள் = 15 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

பிரிவு A யின் முடிவு

**பிரிவு B: தகவல் முறைமை முகாமைத்துவம்**

**<u>ஏதாவது இரண்டு (2)</u> வினாக்களுக்கு விடை தருக**

**<u>வினா இல. 05 (20 புள்ளிகள்)</u>**

தேசிய வீடமைப்பு வங்கியானது (NHB) குறைந்த மற்றும் நடுத்தர நிலையான வருமானம் பெறுவோரின் அதிகரித்து வரும் வீட்டுக் கடன்களுக்கான கேள்வியினை நிறைவுசெய்யும் பொருட்டு தாபிக்கப்பட்டது. நாடுபூராகவும் உள்ள வாடிக்கையாளர்களை அடக்கும் வகையில் NHB ஒன்பது கிளைகளை நிறுவிய போதிலும், தலைமையகத்திற்கும் கிளைகளுக்கும் இடையிலான தொழிற்பாடுகள் E-வியாபார தொழில் நுட்ப பிரயோகங்களின் மூலம் இணைக்கப்படவில்லை. வாடிக்கையாளருடன் வியாபார செயன்முறையை வலுவுள்ளதாக்குவதற்கு இணையத்தள தொழில்நுட்பப் பயன்பாடு பாரிய பயன்களை அளிக்கும்.

**நீர் செய்யவேண்டியது:**

(a) வங்கியின் பிரதான குறிக்கோள்களை அடைவதில் E-வியாபாரத்தின் வகிபாத்திரத்தை விபரிக்குக. **(06 புள்ளிகள்)**

(b) அடிப்படையில் E- வியாபாரம் 3 பிரதான துறைகளை மேம்படுத்துவதில் தங்கியுள்ளது. மேற்படி வங்கி தொடர்பில் அந்த **<u>மூன்று (3)</u>** பிரதான துறைகளை குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

(c) இதன் வியாபாரத் தொழிற்பாடுகளின் போட்டி அனுகூலத்தினை தகவல் முறைமை எவ்வாறு மேம்படுத்த முடியுமென, உதாரணங்களுடன் சுருக்கமாக குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**<u>வினா இல. 06 (20 புள்ளிகள்)</u>**

வரையறுத்த SMS ஹோல்டிங்ஸ் (தனி) கம்பனியின் முதன்மை நோக்கங்கள் போட்டி அனுகூலங்களை அடைவதில் சிறிய மற்றும் நடுத்தர தாளாண்மைகளுக்கு புதிய IT தீர்வுகளுக்கு உதவுதலும், தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளை மேம்படுத்துவதும் ஆகும். கம்பனியானது தொழிற்துறை சார்ந்த IT பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை வழங்குவதற்கு ஏதுவாக கணனி வன்னுறுப்பு (hardware), மென்னுறுப்பு (software), வலையமைப்பு (network) மற்றும் நிதிப் பகுப்பாய்வில் விசேட தொழில்நுட்ப வல்லுனர்கள் உள்ளடங்கலாக 30 ஊழியர்களை தொழிலுக்கு அமர்த்தியுள்ளது. புதிய IT முறைமைச் செயன்முறையானது வன்னுறுப்பு மற்றும் மென்னுறுப்புக்களின் கொள்வனவு, மென்னுறுப்பு விருத்தி, விதிமுறைகள் மற்றும் செயற்கூற்றுகளின் (procedures and programmes) சோதனை, ஆவணப்படுத்தலை விருத்திசெய்தல் மற்றும் புதிய IT முறைமையை பாவிப்போரின் கல்வி மற்றும் பயிற்சி ஆகியன சம்பந்தப்பட்டதாகும். புதிய IT செயற்திட்ட பிரயோகத்தின் வெற்றிக்கு பிரதான காரணியாக அமைவது செயற்திட்ட முகாமைத்துவ நுட்பங்களாகும்.

**நீர் செய்யவேண்டியது:**

(a) புதிய IT முறைமை அபிவிருத்தி வேலையினை மேற்கொள்ளும்போது செயற்திட்ட முகாமைத்துவ செயன்முறைகள் **<u>ஐந்தினை (5)</u>** குறிப்பிடுக. **(06 புள்ளிகள்)**

(b) செயன்முறைகளின் பல்வேறு கூறுகள் தொடர்பாக ஒன்பது செயற்திட்ட அறிவு முகாமைத்துவ பகுதிகள் (project knowledge management areas) உள்ளன. செயற்திட்ட நோக்கெல்லை முகாமை (project scope management), செயற்திட்ட நேர முகாமை (project time management) மற்றும் செயற்திட்ட கிரய முகாமை (project cost management) ஆகியவற்றின் பிரதான காரணிகளை சுருக்கமாக விபரிக்குக. **(09 புள்ளிகள்)**

(c) தகவல் முறைமை வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு உதவக்கூடிய இரண்டு வழிகளை உமது சொற்களில் விபரிக்குக. **(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**<u>வினா இல. 07 (20 புள்ளிகள்)</u>**

கீழே தரப்பட்டுள்ள ஏதாவது **<u>நான்கு (4)</u>** விடயங்கள்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) உருமாதிரி ஆக்கம் (Prototyping)

(ii) வியாபாரத்தில் ஒரு மாற்றத்தினை நடைமுறைப்படுத்துதல்.

(iii) புதிய IT முறைமை நடைமுறையில் உள்ளபோது மாற்ற முகாமைத்துவ செயன்முறை (Change management process)

(iv) இரகசிய நுழைவு மீறல்கள் (Hacking)

(v) கணனி வைரஸ்கள் (Computer viruses)

**(4 × 5 புள்ளிகள் = மொத்தம் 20 புள்ளிகள்)**

பகுதி II இன் முடிவு

வினாப்பத்திர முடிவு

---